# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1592 - 2009 මාර්තු 06 වැනි සිකුරාදා - 2009.03.06

*1592 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 254 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 255 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வரராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, சித்திரை மாதம் 06 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
2009, மாசி மாதம் 11 ஆந் திகதி.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | கொடகவெல | நியங்கம பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் அடகளன் கோறளை விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், இரத்தினபுரி |

3-30

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009.04.06 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
2009, மாச்சு மாதம் 03 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மாவட்டத்தில் பேருவளை நகர பிரிவின் வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |

3-76

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதாரத் திணைக்களம்

இலங்கை விஞ்ஞான சேவையில் வகுப்பு II தரம் II இன் வெற்றிடங்களை நிரப்புதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2007 (2009)

சுகாதாரத் திணைக்களத்தில் அதற்கு எதிரில் காட்டப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பதவி வெற்றிடங்களின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் 1 தொடக்கம் 6 வரை முதலாம் பக்கத்தில் அமையும் வண்ணம் 8 1/2 X 12 அங்குலம் (ஏ4) அளவுத் தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2009.04.03 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடிய வகையில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இன் பதவிகளுக்கான பரீட்சை – 2007 (2009)" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

அந்தந்தப் பதவிகளுக்காக வெவ்வேறாக விண்ணப்பங்கள் அனுப்பப்படுதலாகாதென்பதுடன், தமது விண்ணப்பத்தில் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு விண்ணப்பிக்கும் பதவிகளை ஒழுங்கு முறையாகக் குறிப்பிடுதல் வேண்டும். உதாரணமாக, சுகாதாரத் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள உயிரியல் இரசாயனவியலாளர், பூச்சியியலாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்க உத்தேசிக்கும் பரீட்சார்த்தியொருவர் சம்பந்தப்பட்ட பதவிகளுக்குரிய குறியீட்டு இலக்கங்களை (1013, 1015) என்ற முறையில் விண்ணப்பத்தின் 6 ஆம் பந்தியில் "குறியீட்டு இலக்கம்" எனும் நிரலில் காட்டுதல் வேண்டும்.

**சுகாதார சேவைகள் திணைக்களம்**

| | வெற்றிடப் பதவிகள் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1 | மருந்துப் பகுப்பாய்வாளர் (இரசாயனம்) | 1011 |
| 2 | மருந்துப் பகுப்பாய்வாளர் (உயிரியல் விஞ்ஞானம்) | 1012 |
| 3 | உயிரியல் இரசாயனவியலாளர் | 1013 |
| 4 | பௌதீக விஞ்ஞானவியலாளர் | 1014 |
| 5 | பூச்சியியலாளர் | 1015 |
| 6 | ஆராய்ச்சி அலுவலர் (இயற்கை உற்பத்திகள்) | 1016 |
| 7 | ஆராய்ச்சி அலுவலர் (பூச்சியியல்) | 1017 |
| 8 | ஆராய்ச்சி அலுவலர் (தடுப்பு மருந்து மற்றும் உற்பத்திகள்) | 1018 |
| 9 | ஆராய்ச்சி அலுவலர் நுண்ணுயிரியல் (பக்றீரியாவியல், வைரஸ்வியல்) | 1019 |
| 10 | ஆராய்ச்சி அலுவலர் (உயிரியல் இரசாயனம்) | 1020 |

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான பிரிவுகளும் சேவை நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இந்நியமனமானது மூன்று ஆண்டுகால தகுதிகாண்நிலைக் காலத்தை உடையதாக அமையும்.

(ii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் இத்தீவின் எப்பாகத்திலாயினும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். மாகாண அரச சேவையிலும் பணியாற்ற கீழ்ப்படுதல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவையில் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 509/7 ஆம் இலக்க 1988, யூன் மாதம் 7 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் இலங்கை விஞ்ஞான சேவைகள் பிரமாணக் குறிப்பில் விதித்துள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொண்டுள்ள அல்லது இனிமேல் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைவாக தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் இலங்கை விஞ்ஞான சேவையில் வகுப்பு II தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவார்.

(iv) தமக்கு வழங்கியுள்ள பதவியில் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/அல்லது நியமனம் செய்த பதவியில் அல்லது நியமனம் செய்த பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு நிராகரிக்கும் அல்லது அலட்சியப்படுத்தும் விண்ணப்பதாரிகளின் நியமனங்கள் இல்லாதொழிக்கப்படும்.

3. **அமைவு மற்றும் மாதச் சம்பள அளவுத்திட்டம்** :

வகுப்பு I : ரூபா 36,755 – 17 x 1,050 - ரூபா 53,555
வகுப்பு II : ரூபா 30,175 – 8 x 790 - ரூபா 35,705
வகுப்பு III : ரூபா 22,935 – 10 x 645 - ரூபா 29,385

(நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் நியமனத் திகதியிலிருந்து 06 வருடங்களுக்குள் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையிலும் அ. நி. சு. 20/2001 இற்கு அமைய சித்தியடைதல் வேண்டும்.)

**குறிப்பு** :

(i) முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை.- பின்வரும் பாடங்களைக் கொண்டமைந்த முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் :

(அ) நிதி முறைகள்
(ஆ) நிருவாகம்
(இ) திணைக்கள ஒழுங்குவிதிகள்

(ii) இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை.- உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்டுள்ளவாறு எம். எஸ்சீ., எம். பில் (M. Phil.) அல்லது பீஎச். டி போன்ற பட்டநிலைப் பின் படிப்பு பட்டமொன்றில் சித்தியடைதல் வேண்டும்.

4. **பதவிகளுக்கான கல்வித் தகைமைகளும் வேறு தமைகமைகளும்**.- சகல பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விடயங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு சாட்சிகளை முன்னளித்தல் வேண்டும் :

4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
4.2 நல்லொழுக்கம் உடையவராகவும் சிறந்த உடல்நலம் கொண்டவராகவும் விளங்குதல் வேண்டும் ;

4.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்பு பரீட்சார்த்திகள் 22 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும் (இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு பதவிகளுக்காக விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைப் பெறும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இவ் ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.)

4.4 விண்ணப்ப முடிவுத் திகதியன்று கீழ்க்குறிப்பிடும் கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

| தொழில் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| 1. மருந்துப் பகுப்பாய்வாளர் (இரசாயனம்) | (அ) இரசாயனவியல் தொடர்பான விஞ்ஞான மாணி விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(ஆ) இரசாயனவியலைப் பாடமாகக் கொண்டு விஞ்ஞானமாணிப் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியல் தொடர்பான அல்லது அதற்கு ஏற்புடையதான பாடங்கள் தொடர்பாக பட்டநிலைப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(இ) மருந்தகம் (Pharmacy) தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(ஈ) வேதியியல் இரசாயனவியல் நிறுவனத்தில் அல்லது (இலங்கை) இரசாயனவியல் நிறுவனத்தில் உறுப்பினராக இருத்தல்<br><br>**குறிப்பு**.- இரசாயனவியலை பாடமாகவும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட பொது விஞ்ஞானப் பட்டமும், விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு முன்னரான 05 ஆண்டுகாலப் பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டவாறு சுகாதாரத் திணைக் களத்தில் பத்தாண்டு சேவைக் காலத்தையும் கொண்டுள்ள மருந்தகவியலாளர் மற்றும் மருத்துவ இரசாயனகூட தொழில் நுட்பவியலாளர் ஆகியோர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு தகைமையுடையவர்களாவர் (திருப்திகரமான சேவைக்காலம் என பொருள்படுவது உரிய சேவைக்காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றும் அக்காலப்பகுதியில் செய்யப்பட்ட குற்றமொன்றுக்கு எச்சரிக்கை நீங்கலாக வேறு ஒழுக்காற்று தண்டனையை பெற்றிராத சேவைக்காலமாகும்.) |
| 2. மருந்துப் பகுப்பாய்வாளர் (உயிரியல் விஞ்ஞானம்) | (அ) விலங்கியல் அல்லது இரசாயனவியலை மேலதிக பாடமாகக் கொண்டு இரசாயனவியல் அல்லது விலங்கியல் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஆ) மருந்துப் பொருளியல் (Pharmacology) அல்லது மருந்தகம் (Pharmacy) தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(இ) மருந்துப் பொருளியல் (Pharmacology) தொடர்பாக பட்டநிலைப் பின்படிப்புப் பட்டத்துடன் விஞ்ஞானமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஈ) விலங்கியல் மற்றும் இரசாயனவியலைப் பாடமாகக் கொண்டு வகுப்பு I அல்லது வகுப்பு II இல் விஞ்ஞானமாணிப் பொதுப் பட்ட மொன்றைப் பெற்றிருத்தல்<br><br>**குறிப்பு**.- இரசாயனவியல் மற்றும் விலங்கியலைப் பாடமாகக் கொண்டு பொது விஞ்ஞானப் பட்டமும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முன்னரான 05 ஆண்டுகாலப் பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டவாறு சுகாதாரத் திணைக்களத்தில் பத்தாண்டு சேவைக் காலத்தையும் கொண்டுள்ள மருந்தகவியலாளர் மற்றும் மருத்துவ இரசாயனகூட தொழில்நுட்பவியலாளர் ஆகியோர் |

| தொழில் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|
| | விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு தகைமையுடையவர்களாவர் (திருப்திகரமான சேவைக்காலம் என பொருள்படுவது உரிய சேவைக்காலப்பகுதி யில் சகல சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றும் அக்காலப்பகுதியில் செய்யப்பட்ட குற்றமொன்றுக்கு எச்சரிக்கை நீங்கலாக வேறு ஒழுக்காற்று தண்டனையை பெற்றிராத சேவைக்காலமாகும்.) |
| 3. உயிரியல் இரசாயனவியலாளர் | (அ) இங்கு பின்குறிப்பிட்டுள்ள கல்வித் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இரசாயனவியல் பாடத்தில் வகுப்பு I அல்லது வகுப்பு II இல் சிறப்புப் பட்டம் அல்லது லண்டன் அல்லது இலங்கையில் இரசாயனவியல் தொடர்பான அரச கல்லூரியில் அங்கத்தவராக இருத்தல்.<br>அல்லது<br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியலை பாடமாகக் கொண்டு பொதுப் பட்டமொன்று மற்றும் இரசாயனவியல் பாடத்தில் பீ. எச். எஸ். சீ. போன்ற பட்டநிலைப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br><br>**குறிப்பு**.- இரசாயனவியலுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பொது விஞ்ஞானப் பட்டமொன்றைப் பெற்றுள்ளதும், விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னரான 05 ஆண்டுகாலப் பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டவாறு சுகாதாரத் திணைக்களத் தில் பத்தாண்டு சேவைக் காலத்தையும் கொண்டுள்ள மருந்தக வியலாளர் மற்றும் மருத்துவ இரசாயனகூட தொழில்நுட்பவிய லாளர் ஆகியோர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு தகைமையுடையவர்களாவர் (திருப்திகரமான சேவைக்காலம் என பொருள்படுவது உரிய சேவைக்காலப்பகுதியில் சகல சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றும் அக்காலப்பகுதியில் செய்யப்பட்ட குற்றமொன்றுக்கு எச்சரிக்கை நீங்கலாக வேறு ஒழுக்காற்று தண்டனையை பெற்றிராத சேவைக்காலமாகும்.) |
| 4. பௌதீக விஞ்ஞானவியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதிகவியல் பாடத்தில் (விசேட) சிறப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) பௌதீகவியல் விசேட பட்டம் அல்லது பௌதீகவியலை பாடமாகக் கொண்டு விஞ்ஞானமாணிப் பட்டம் மற்றும் கதிரியக்கவியலாளராக அரசாங்கத்திற்கு அல்லது அரசாங் கத்திற்கு இணைந்த நிறுவனமொன்றில் ஐந்து ஆண்டுகள் சேவையாற்றிய அலுவலராக இருத்தல். |
| 5. பூச்சியியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பூச்சி யியலைப் பாடமாகக் கொண்டு விலங்கியலில் விஞ்ஞானமாணி (விசேட) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பூச்சியியல் தொடர்பாக பீ. எச். டி. அல்லது எம். எஸ். சீ./தத்துவமுதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| 6. ஆராய்ச்சி அலுவலர் (இயற்கை உற்பத்தி இரசாயனவியல்) | (அ) இரசாயனவியல் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட சிறப்புப் பட்டம் (வகுப் 1 அல்லது வகுப்பு 2)<br>அல்லது<br>(ஆ) இரசாயனவியலுடன் விஞ்ஞானமாணிப் பொதுப்பட்டத்துடன் எம். எஸ். சீ. அல்லது பி. எச். டி. பட்டம் பெற்றிருத்தல் (இயற்கை உற்பத்தி இரசாயனவியல் தொடர்பான ஆராய்ச்சியின் மூலம்) |

| | |
|---|---|
| 7. ஆராய்ச்சி அலுவலர் (பூச்சியியல்) | (அ) பூச்சியியலை விசேட பாடமாகக் கொண்டு விலங்கியல் தொடர்பான விஞ்ஞானமாணி வகுப்பு 1 அல்லது 2 இல் விசேட சிறப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஆ) (விலங்கியலுடன்) விஞ்ஞானமாணிப் பொதுப்பட்டம் வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 மற்றும் எம். எஸ். சி. அல்லது பீ. எச். டி. பட்டம் பெற்றிருத்தல் |
| 8. ஆராய்ச்சி அலுவலர் (தடுப்பூசி மற்றும் உற்பத்திகள்) | (அ) இரசாயனவியல் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட (சிறப்பு) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஆ) இரசாயனவியலைப் பாடமாகக் கொண்டு விலங்கியல் தொடர்பான எம். எஸ். சீ. பட்டம்<br>அல்லது<br>(இ) இரசாயனவியலைப் பாடமாகக் கொண்டு விஞ்ஞானமாணிப் பொதுப்பட்டம் வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 மற்றும் (நுண்ணுயிரியல் மற்றும் உயிரியல் இரசாயனவியல் தொடர்பான பட்டநிலைப் பின்படிப்புப் பட்டம்) |
| 9. ஆராய்ச்சி அலுவலர் நுண்ணுயிரியல் (பக்றீரியாவியலாளரும், வைரஸ்வியலாளரும்) | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நுண்ணுயிரியலைப் பாடமாகக் கொண்டுள்ள தாவரவியல் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட, வகுப்பு 1, அல்லது வகுப்பு 2 இல் விசேட சிறப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தாவரவியலைப் பாடமாகக் கொண்டு விஞ்ஞானமாணிப் பொதுப்பட்டம் வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 மற்றும் நுண்ணுயிரியல் தொடர்பாக எம். எஸ். சி. அல்லது பி. எச். டி. பட்டம்<br>அல்லது<br>(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பி. எஸ். சி. பட்டம் வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 மற்றும் நுண்ணுயிரியல் தொடர்பாக பட்டநிலைப் பின் படிப்புத் தகைமைகள் |
| 10. ஆராய்ச்சி அலுவலர் (உயிரியல் இரசாயனம்) | (அ) இரசாயனவியல் தொடர்பாக விஞ்ஞானமாணி விசேட (சிறப்பு) பட்டத்தில் வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 ஐப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(ஆ) சயன மருத்துவ இரசாயனவியல் தொடர்பாக எம். எஸ். சி. அல்லது பி. எச். டி. பட்டத்துடன் விஞ்ஞானமாணி விசேட (சிறப்பு) பட்டம் பெற்றிருத்தல்<br>அல்லது<br>(இ) இரசாயனவியலுடன் விஞ்ஞானமாணிப் பொதுப் பட்டம் மற்றும் சயன மருத்துவ உயிரியல் இரசாயனவியல் தொடர்பாக எம். எப். பி. பட்டம் பெற்றிருத்தல் |

**குறிப்பு**.- (அ) தகைமை தொடர்பான உத்தியோகபூர்வமான சான்றிதழை அல்லது அச்சான்றிதழுக்குப் பதிலாக அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஏற்றுக்கொள்ளத் தக்கவொரு உத்தியோகபூர்வ ஆவணத்தை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்திருந்தால் மாத்திரம் விஞ்ஞான சேவையில் நியமனத்திற்கான தகைமைகளைக் கொண்டுள்ளதாகக் கருதப்படும். அதன்படி அனைத்துப் பரீட்சார்த்திகளும் பதவிக்கான சகல தகைமைகளையும் விண்ணப்பம் முடிவுறும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்தல் கட்டாயமாகும்.

5. **பின்வரும் ஆவணங்களை தேவையேற்படும்பொழுது முன்வைக்குமாறு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுவார்கள்**.-

(அ) பிறப்புச் சான்றிதழ் (**கவனிக்கவும்** : சமயத் தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) ;

(ஆ) பட்டங்கள் மற்றும் உயர்கல்விச் சான்றிதழ்கள் ;

(இ) நற்சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று கல்வி நிறுவனமொன்றின் பணிப்பாளர் விரிவுரையாளர் / பல்கலைக்கழக பேராசிரியர்களிடம் இருந்து பெற்றிருத்தல் வேண்டும்) ;

(ஈ) தொழில்சார் அனுபவம் அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்கள்.

6. (i) விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இல. 01 தொடக்கம் 06 வரை முதலாம் பக்கத்திலும் 07 தொடக்கம் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதி 03 ஆம் பக்கத்திலும் அமையும் வண்ணம் விண்ணப்பப்படிவத்தை தயார் செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை சொந்த கையெழுத்தில் தெளிவாக நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களும் முழுமை பெறாது தகைமைகளைக் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவங்களும் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் அவ் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். அதேபோன்று பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாக உள்ளதா என்பதை பரீட்சார்த்தியொருவராலே அவதானிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும்போது அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகையில் அறிவிப்பு ஒன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2/3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தை பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதியினையும் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியிடமாயின் அனுமதி அட்டை அனுப்பவேண்டிய தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் பயனுள்ளதாகும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் 300 ரூபாவாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்பு எந்தவொரு பிரதேச செயலகத்திலும் வருமானத் தலைப்பு 6, உப தலைப்பு 1, விடயம் 4, உப விடயம் 4 இல் வரவு வைக்கும் பொருட்டு செலுத்துதல் வேண்டும். பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

8. இந்த வர்த்தமானியின் பகுதி 1 பந்தி (11அ) இன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பான பொது நிபந்தனைகளின்பால் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

9. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

10. விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்ட சகல நபர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினைச் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார் :

(ஆ) பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதி ஒன்று வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகுதிகளும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாகக் கொள்ளவியலாது.

11. **பரீட்சார்த்திகளின் அடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலையத்தில் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இதன் பொருட்டு பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆர் ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்).

12. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்தத் தன்மை இப்பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் நிராகரிக்கப்படலாம். பரீட்சார்த்தி அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டியளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் உண்மை எதனையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

13. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானத்தின்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

*14.* ***பரீட்சைத் திட்டம்.- பரீட்சை மொழி மூலம்.***- *(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.*

*(ஆ) பரீட்சார்த்தி தகைமைப் பரீட்சையை எம்மொழி மூலம் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.*

*(இ) தகைமைப் பரீட்சையில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் மூலம் பாடங்களில் சித்தியடைந்த பரீட்சார்த்தி ஒருவர் தகைமைப் பரீட்சையில் பெரும்பான்மையான பாடங்களை எந்த மொழியில் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழியில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சையை எழுதுதல் வேண்டும்.*

*(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் மேலதிக பாடத்தை இன்னொரு மொழியிலும் சித்தியடைந்து விசேட பட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்தியொருவர் பிரதான பாடத்தில் விடை எழுதிச் சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.*

***குறிப்பு.***- (i) *மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட "தகைமைப் பரீட்சை" என்னும் சொற்றொடர் அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட பரீட்சை என்பதைக் குறிக்கும்.*

(ii) *பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியில் மட்டுமே விடை எழுதுதல் வேண்டும்.*

(iii) *பரீட்சார்த்தி ஒருவர் தான் விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியையோ, பாடங்களையோ தரங்களையோ மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.*

(iv) *பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.*

*15.* ***ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை.***- *அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் வகையில், அவரின் பொருட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் பெறுபேறுகளின் திறமை ஒழுங்கின்படி அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கீகரிக்கின்ற நேர்முகப் பரீட்சை சபையால் நடாத்தப்படும் தகைமைகளை பரிசீலனை செய்யும் அச்சபையின் பரிந்துரைகளையும் கருத்தில்கொண்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் ஆட்சேர்ப்பு செய்யப்படும் :*

| | | |
|---|---|---|
| *(அ) நுண்ணறிவுத் தேர்வு* | - | *100 புள்ளிகள் (1 மணித்தியால வினாத்தாளாகும்.)* |
| *(ஆ) பொது வினாத்தாள்* | - | *100 புள்ளிகள் (3 மணித்தியால வினாத்தாளாகும்.)* |

*16.* ***பாடத்திட்டங்கள்.***- *(அ) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை.- ஒரு மணித்தியாலத்திற்கு வரையறுக்கப்பட்ட வினாத்தாள், பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான நியாயம் காணும் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து நன்கு ஊகித்துணரும் ஆற்றலையும் மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளவாறு இது பல்விருப்ப வினாத்தாளாக அமையும்.*

*(ஆ) பொது வினாத்தாள்.- இது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது :*

I *ஆவது பகுதி – சகல விடயங்களும் அடங்கும் வகையில் விரிவான விஞ்ஞான விடயங்கள் தொடர்பான அமைவு ரீதியான வினாக்களைக் கொண்டிருக்கும்.*

II *ஆவது பகுதி – பொருளாதார, அரசியல் மற்றும் கலைத்துறை போன்ற ஏனைய பொதுவான விடயங்கள் தொடர்பான கட்டமைப்பு முறையிலான வினாக்களைக் கொண்டமைந்திருக்கும்.*

*17. நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செயற்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்கள் ஏதேனும் எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.*

*18. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிக் கூற்றுகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழிக்கூற்று வலுவிலிருக்கும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

*டி. திசாநாயக்க,*
*செயலாளர்,*
*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.*

*பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 07,*
*2009.02.17.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதாரத் திணைக்களம்**

*இலங்கை விஞ்ஞான சேவையில் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2007 (2009)*

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

விண்ணப்பிக்கும் பதவி/பதவிகள் :

| பதவி | குறியீட்டு அட்சரம் |
|---|---|
| | |

1. விண்ணப்பதாரரின் பெயர் :
   1.1 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்) : ----.
   1.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
   1.3 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்.) :----.

2. முகவரி :-
   2.1 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலத்தில்) :----.
   2.2 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. பால் :-
   ஆண் - 0
   பெண் - 1

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

5. வயது :-
   5.1 பிறந்த திகதி :

   ஆண்டு : மாதம் : திகதி :

   5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :-

   வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :
   விவாகமானவர் - 01
   விவாகமாகாதவர் - 02

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

7. தகைமைகள் :

   7.1 கல்வித் தகைமைகள் :
   (சித்தியெய்திய பட்டம், வகுப்பு, பாடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள் என்பவற்றைக் குறிப்பிடவும்.) :

| பரீட்சை/பட்டம் | வகுப்பு | ஆண்டு | பாடங்கள் | பல்கலைக் கழகங்கள்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| (1)<br>(2)<br>(3)<br>(4) | | | | |

   7.2 தொழிற்றகைமைகள் :----.

8. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை :
 (1) சிங்களம் :----.
 (2) தமிழ் :----.
 (3) ஆங்கிலம் :----.

9. பாடசாலையை விட்டு விலகிய பின் செய்த தொழில் மற்றும் அல்லது பெற்றுள்ள பயிற்சி பற்றிய விபரங்களும் (சேவையில் சேர்ந்த, சேவையை விட்டு விலகிய திகதிகளையும் விலகியதற்கான காரணங்களையும் குறிப்பிடுக) :----.

10. தற்போது வகிக்கும் பதவியின் விபரங்கள் :-

 (அ) பதவி :----.
 (ஆ) திணைக்களம்/நிறுவனம் :----.
 (இ) நியமனத் திகதி :----.
 (ஈ) நிரந்தரம்/ஓய்வூதிய உரித்துடையது/ஓய்வூதிய உரித்தற்றது/தற்காலிகமானது என்பதைக் குறிப்பிடுக :----.
 (உ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீர்களா ? :----.
 (ஊ) பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டமும் தற்பொழுது கிடைக்கும் சம்பளமும் :----.

11. நீதிமன்றமொன்றில் ஏதேனும் குற்றப்பாதகச் செயலுக்காகக் குற்றவாளியாக்கப்பட்டிருந்தால் அக்குற்றம் என்ன என்பதையும் அதற்குக் கிடைத்த தண்டனை என்ன என்பதையும் குறிப்பிடுக :----.

12. காசுப்பற்றுச்சீட்டைக் கழராதவாறு நன்கு ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் உபயோகமாகும்.)

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
திகதி :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிகூறுகின்றேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என தெரிவுசெய்யப்பட முன் அறிய நேர்ந்தால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்றபின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சகல சட்டதிட்டங்களுக்கும் நான் கீழ்ப்படிவேன் என வெளிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனில்-

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

மேற்போந்த 12 ஆம் பந்தியில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும்/கீழ்க்காணுமாறு திருத்தப்பட வேண்டும் எனவும் அவரது வேலையும் நடத்தையும் .................................. எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன். தற்பொழுது அவர் வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி :----.

3-68

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சை

**திறமைச் சான்றிதழ்களுக்கான வகைகள்** :

(அ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(ஆ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் பொது வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(இ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் திறமைகாண் சான்றிதழ் ;

2. பரீட்சை எடுக்க விரும்புவோருக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்.- இப்பரீட்சை எடுக்க விரும்பும் ஒவ்வொருவரும் பதினான்கு (14) வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. **பரீட்சைத் திட்டம்** :

(அ) உயர்தர வகுப்பு.- பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது:-

பகுதி 1 : இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - உயர் மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (3 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அவதான நடவடிக்கை முறைகள் - (2 மணித்தியாலங்கள்)

பகுதி 2 : செயல் முறை மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 05 சொற்கள்)

(ஆ) **பொது வகுப்பு**.-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலங்கள்)

(இ) **புதுப் பயிலுநர்**.-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள் - (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

4. **பரீட்சைகளுக்கான நிபந்தனைகள்**.- எல்லாத் திறமைச் சான்றிதழ்களின் பகுதிகளுக்கும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(i) பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் எல்லாப் பகுதிகளிலும் சித்தியடைதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பகுதி 1 இல் (இரண்டு எழுத்துமூல வினாத்தாள்கள்) ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) இப்பரீட்சையின் பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி 2 இற்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்;

(iv) பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் ஏதாவது அடுத்துவரும் பரீட்சைகளில் பகுதி 2 இற்கு மட்டும் விண்ணப்பிக்கலாம்.

5. **பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்**.- இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் தங்களின் பரீட்சைக் கட்டணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் தேவைப்படின் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சைக் கட்டணமானது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பேரில் காசுக்கட்டளையாகவோ அல்லது எந்தவொரு வங்கியினதும் காசோலையாகவோ செலுத்தப்படலாம்.

நுழைவுப் படிவமானது, பதியப்பட்ட ஒப்படைப்பு மூலம் அல்லது பதிவு அஞ்சல் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது நேரடியாகக் கொண்டுவந்து கொடுக்கப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும் ஏனெனில் தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டதற்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி நுழைவுப் படிவம் ஒன்று கவனிக்கப்படவில்லை அல்லது தொலைந்து போயிற்று என்ற உரிமைக் கோரிக்கை எதனையும் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கவனத்திற்கொள்ளாது. கட்டணங்கள்

மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் அவை ஒரு பரீட்சையிலிருந்து பிந்திய திகதியொன்றில் இன்னொரு பரீட்சைக்கும் மாற்றப்படமுடியாது. தமது விண்ணப்பத்தை மீளப்பெறுகின்ற அல்லது ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக்குத் தோற்றமுடியாத பரீட்சார்த்தி எவரும் ஏதேனும் பிந்திய நுழைவுக்காக முழுப் பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

| பரீட்சையின் வகை | பகுதி 1 இற்கான கட்டணம் ரூபா | பகுதி 2 இற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர்தர வகுப்பு | 276 | 138 |
| பொது வகுப்பு | 138 | - |
| புதுப்பயிலுநர் வகுப்பு | 138 | - |

7. **விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியும் நுழைவும்**.- பரீட்சை ஒரு வருடத்தில் மூன்று முறைகள் நடாத்தப்படும். பரீட்சைத் திகதி, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் தோதான நுழைவுப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அப்படிவங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு அம்முகவரிக்கு இறுதி நுழைவுத் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும் :-

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08.

| சான்றிதழ்களின் வகை | இறுதி நுழைவுத் திகதி |
|---|---|
| உயர்தர வகுப்பு<br>பொது வகுப்பு<br>புதுப்பயிலுநர் வகுப்பு | 2009.04.18 |

8. **அத்தாட்சிப்படுத்தல்**.- பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் :-

சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசுத் தரைப்படை, கடற்படை அல்லது வான்படை ஆகியவற்றின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர், அரசாங்க சேவையில் ஆண்டொன்றுக்கு ரூபா 4,93,920 க்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்.

இவ்வாறு அமையாத மற்றைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக் கப்படும்.

9. **பரீட்சார்த்திகளை இனம் காணல்**.- பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது ஆள் அடையாளத்தைக் காட்டுமாறு தேவைப்படுத்தப் படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

எல்லாப் பரீட்சார்த்திகளும், 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயல்படுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படாத விடயம் எதுவும் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் தீர்த்து வைக்கப்படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08,
18.02.2009.

3-89

---

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் பல்கலைக்கழகம்**

பட்டப்படிப்புப் பயிலிளவல் நிலைகள் (ஆண்/பெண்)

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் பல்கலைக்கழகம் பட்டப்படிப்புப் பயிலிளவல் (ஆண்/பெண்) நிலையினருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் நூற்கல்வி, மற்றும் இராணுவ கற்கைக் கூறுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கு, 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி கழகச் சட்டத்தினாலும், பின்னர் அதற்குச் செய்த திருத்தங்கள் மூலமும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் பல்கலைக்கழகம் பட்டங்கள் அளிப்பதற்கு தத்துவம் அளிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகம் ஆகும்.

3. இப்பயிலிளவல் நிலைகளுக்கு ஏற்புடைய பட்டக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் கலை, வர்த்தகம், முகாமை, தொழில்நுட்ப விஞ்ஞான நெறிகள் ஆகியன தொடர்பில் மூன்று வருடங்களைக் கொண்டவையாகவும், எந்திரவியல் நெறிகள் தொடர்பில் மூன்றரை வருடங்களைக் கொண்டவையாகவும் இருக்கும்.

3.1 மூன்று சேவைகளுக்கும் பயிலிளவல்களை ஒதுக்கீடு தெரிவுக்காக நடாத்தப்படும் மூன்று நேர்முகப் பரீட்சைகளில் பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலும், ஒவ்வொரு சேவையில் உள்ள வெற்றிடங்களின் கிட்டுதலின் அடிப்படையில், விளங்கும், பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் நூற்கல்வி மற்றும் இராணுவப் பயிற்சி அம்சங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன்

பேரிலும் இரண்டாம் ஆண்டின் முடிவில் பொருத்தமானவிடத்து, நிலையான இலங்கைத் தரைப்படை, கடற்படை அல்லது விமானப்படையில் ஆணை வழங்கப்படுவர்.

3.2 மூன்று வருட/மூன்றரை வருடப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நூற்கல்வி, மற்றும் இராணுவ பயிற்சிக் கூறுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பேரில், எந்திரவியல் முகாமை தொழில்நுட்ப விஞ்ஞானங்கள், வர்த்தகம் அல்லது கலை ஆகிய துறைகளில் ஏற்புடையவாறு இளமாணிப் பட்டங்கள் வழங்கப்படும்.

3.3 பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.

3.4 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பாதுகாப்புக் கல்வித்துறையில் பின்வரும் இளமானிப் பட்டக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றைப் பயிலுதல் வேண்டும்.

(i) பின்வரும் துறைகளில் ஒன்றில் எந்திரவியலில் விஞ்ஞான இளமாணி (மூன்றரை வருட காலம்) – (ஆண்கள் மட்டும்) :-

(அ) சிவில் எந்திரவியல்
(ஆ) பொறிமுறை எந்திரவியல்
(இ) மின்முறை எந்திரவியல், இலத்திரனியல் எந்திரவியல்
(ஈ) கடல்சார் எந்திரவியல்
(உ) வானூர்தி எந்திரவியல்.

(ii) முகாமை, தொழில்நுட்ப விஞ்ஞானங்களில் விஞ்ஞான இளமாணி (மூன்று ஆண்டு காலம்) – (ஆண், பெண்)

க.பொ. த. (உயர்தரம்) இல் பாடமொன்றாக பௌதீகவியல் அல்லது கணிதம் ஆகியவற்றுடன் அல்லது பௌதீக விஞ்ஞானத்துடன் உயிரியல் விஞ்ஞானத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கு கரிசனைக்கு எடுக்கப்படுவதற்கு அவசியப்படும் தரத்தை எய்தியவர்களுக்கு.

(iii) வர்த்தகத்தில் இளமாணி .- (மூன்று ஆண்டு காலம்) – (ஆண், பெண்)

க. பொ. த. (உயர்தரம்) இல் வர்த்தகப் பாடங்களுடன், பல்கலைக்கழக அனுமதிக்கு கரிசனைக்கு எடுப்பதற்கு அவசியப்பட்ட தரத்தை எய்தியவர்களுக்கு.

(iv) கலை இளமாணிப் பட்டம் (மூன்று ஆண்டு காலம்) – (ஆண், பெண்)

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் பின்வரும் ஒரு பாடங்கள் உட்பட கலைப் பாடங்களைப் படித்து, பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் கரிசனைக்கு எடுக்கப்படுவதற்கு அவசியப்பட்ட தரத்தை எய்தியவர்களுக்கு –

புவியியல், பொருளியல், வரலாறு, வியாபாரப் புள்ளிவிபரங்கள், வியாபாரக் கற்கைகள், அரசியல் விஞ்ஞானம் (பாட இல. 73), கணிதம் (பாட இல. 07).

3.5 தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் ஆங்கிலம், முகாமைத்துவம், சட்டம், சர்வதேசக் கற்கைகள்/இராணுவ விடயங்கள் ஆகியன அடங்கலாக அந்தந்தப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய ஒரு தொடர் பொதுவான மற்றும் சிறப்புப் பாடங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்பது அவசியமாகும்.

3.6 அவர்கள் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதி முழுவதும் உடல்விருத்தி, உடற்பயிற்சி, ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சி பெறுமாறும் வேண்டப்படுவர்.

**4. பட்டப்படிப்பு பயிலளவல் நிலைகளுக்கான தகுதித் தேவைகள் :**

விண்ணப்பதாரிகள் :

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) 2009 சித்திரை 3 அன்று 18 வயதுக்குக் குறையாதவர்களாயும், 22 வயதுக்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையடைந்தவராக அறிவிக்கப்பட்டிருப்பதுடன், பின்வரும் தேவைப்பாடுகளை நிறைவேற்றி இருக்க வேண்டும்.

(i) புதிய பாடத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற க.பொ.த. (உ./த) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் தோற்றி, ஆகக் குறைந்தது 'S' தரங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

(அ) சகல மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்கள் ; மற்றும்

(ஆ) பொது அறிவு பத்திரத்தில் சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையடைந்தவராக இருக்க வேண்டும்.

(பாடசாலையினால் அல்லது பரீட்சைகள் திணைக்களத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்றதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுப் பத்திரத்தின் பிரதியொன்றை தயவு செய்து இணையுங்கள்.)

(ii) க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்கு ஆகக் குறைந்தது விசேட சித்தி (C) பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) பின்வரும் ஆகக் குறைந்த உடல் தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண் : | உயரம் | - | தரைப்படைக்கு | 165.1 செ. மீ. (5´5") |
| | | | கடற்படைக்கு | 167.6 செ. மீ. (5´6") |
| | | | வான்படைக்கு | 167.6 செ. மீ. (5´6") |
| | நிறை | - | 50 கி. கி. (110 இறாத்தல்கள்) | |
| | மார்பு | - | 81.25 செ. மீ (32" விரிவடையா நிலையில்) | |
| பெண்: | உயரம் | - | தரைப்படைக்கு | 153 செ. மீ. (5´0") |
| | | | கடற்படைக்கு | 160.0 செ. மீ. (5´3") |

**குறிப்பு**.- (விண்ணப்பதாரிகள் விளையாட்டுத்துறையில் அல்லது அதனை ஒத்த வேறு துறைகளில் முனைப்பான சாதனைகளை நிலைநாட்டியவராயிருப்பின் மேற்கூறப்பட்ட உடல் தரங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் தளர்த்தப்படலாம்).

(உ) தேவைப்படும் மருத்துவத் தரங்களுக்கு அமைவுற்று இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைத் திருப்திப்படுத்தும் வகையில், ஒரு மருத்துவச் சோதனையில் சித்தி எய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) திருமணமாகாதவராயிருத்தல் வேண்டும். (பயிலிளவல் அல்லது உத்தியோகத்தர் எவரும் பயிற்சிக் காலத்திலும், படைச் சேவை ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்படும் வரையும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்).

5.**சேவை நிபந்தனைகள் .** – தெரிவுசெய்யப்படும் வேட்பாளர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் உத்தியோகத்தர் பயிலிளவல்களாகத் திரட்டப்படுவர். இவர்கள் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்விக்கழக சட்டத்தின் கீழான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கும், அவற்றுக்கு பின்னர் செய்த திருத்தங்களுக்கும் அமைந்தவர்களாயிருப்பர்.

6. ஆள் திரட்டலின்போது தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பயிற்சிக் காலப்பகுதி முடிவில் தாம் நியமிக்கப்படும் சேவையில் குறைந்தது 10 அல்லது 12 ஆண்டுகளுக்கு சேவையாற்றுவாரென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் ஒரு முறியும், உடன்படிக்கையும் செய்துகொள்ளுதல் வேண்டும்.

7. உத்தியோகத்தர் பயிலிளவல்களுக்கு ஏற்புடைய சம்பளமும், படிகளும் வழங்கப்படும். ஓர் உத்தியோகத்தர் பயிலிளவலுக்கான வருடாந்த திரட்டிய வேதனம் ரூபா 180,240 ஆகும். அத்துடன் உத்தியோகத்தர் பயிலிளவல்களுக்கு பின்வரும் சலுகைகளும் வழங்கப்படும் :-

(I) இலவச இருப்பிட, உணவு வசதி
(II) இலவச மருத்துவ வசதிகள்
(III) இலவச சீருடை
(IV) சொக்கன் வசதிகள்
(V) விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகள்.

8. இலங்கை நிரந்தரத் தரைப்படை, கடற்படை அல்லது வான்படையின் சேவைக்கு நியமிக்கப்பட்டதன் பேரில் படைத்துறை சம்பள விதிக் கோவைக்கமையவும், பதவி வரிசைக்கு ஏற்பவும் அவர்களுக்கு வேதனமும், படிகளும் வழங்கப்படும் :-

(அ) லெப்டினனட் கேர்ணல்/தளபதி/விங் கொமாண்டர் ஆகிய பதவி வரிசை வரை உத்தியோகத்தர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட சம்பள விகிதங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 2/லெப்டினனட் /பதில் உப லெப்டினனட்/பறத்தல் உத்தியோகத்தர் | : ஆண்டொன்றுக்கு ரூபா 1,89,240. |
| லெப்டினனட்/உப லெப்டினனட்/பறத்தல் உத்தியோகத்தர் | : ஆண்டொன்றுக்கு ரூபா 2,75,220 – 30 × 7,740 = ரூபா 5,07,420. |
| கப்டன்/லெப்டினனட் /பறத்தல் லெப்டினனட் | : ஆண்டொன்றுக்கு ரூபா 3,21,660 – 24 × 7,740 = ரூபா 5,07,420. |
| மேஜர்/லெப்டினனட் கொமாண்டர் /ஸ்கொட்ரன் லீடர் | : ஆண்டொன்றுக்கு ரூபா 3,52,620 – 20 × 7,740 = ரூபா 5,07,420. |
| லெப்டினனட் கேர்ணல்/கொமாண்டர்/விங் கொமாண்டர் | : ஆண்டொன்றுக்கு ரூபா 3,62,100 – 15 × 9,480 = ரூபா 5,04,300. |

(ஆ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவுக்குரியதாகும் :-

(I) தகைமை வேதனம்
(II) இலவச உணவு அல்லது பங்கீட்டுப் படி
(III) உள் வசிப்புக் கட்டளையிடப்பட்டிருக்கையில் அனுமதி குலைவுபடி (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)
(IV) சீருடை பேணல் படி

(இ) பின்வரும் வசதிகள் கிட்டும்/படிகள் கொடுப்பனவுக்குரியவையாகும்:-

(I) உள் வசிப்புக் கட்டளையிடப்பட்டிருக்கையில் இலவச இருப்பிட வசதி;
(II) வாடகை மனைகளில் வதியும் போது ஒரு வாடகை உச்ச வரம்பு;
(III) இலவசச் சீருடை;
(IV) திருமணமான உத்தியோகத்தர்களுக்கு சொக்கன் படி அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு சொக்கன் சேவை.
(V) "உள் வசிப்பு" கட்டளையிடப்படும் உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தளத்திலிருந்து வீட்டிற்கு மாதம் ஒன்றுக்கு ஒரு மீள்கடமை ஆணைச்சீட்டு.

9. தரைப்படை/கடற்படை/வான்படையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அவர்களது சம்பள வாய்ப்புக்கள், சேவை நிபந்தனைகள் என்பன தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகளினால் கட்டுப்படுத்தப்படுவர் :-

(I) தரைப்படை/கடற்படை/வான்படைச் சம்பள சட்டக் கோவை.
(II) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தரைப்படை/கடற்படை/வான்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறை ஒழுங்குவிதிகள்.
(III) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறையிலான தரைப்படை/கடற்படை/வான்படை ஓய்வூதியம், பணிக்கொடை சட்டக்கோவை.

10. பயிற்சியின்போது உத்தியோகத்தர் பயிலிளவல்கள் கொத்தலாவல பாதுகாப்பு கல்விக் கழகத்தின் ஏவுநரால் அல்லது அந்தச் சேவைத் தளபதிகளால் விதிக்கப்படக்கூடிய அத்தகைய பயிற்சியை மேற்கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

11. பயிற்சி பெறும் உத்தியோகத்தர் பயிலிளவல்கள் இலங்கையின் எப்பகுதிக்காயினும், வெளிநாட்டுக்காயினும் பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு உட்படலாம்.

12. பயிற்சி பெறும் உத்தியோகத்தர் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் வதிவிடத்தில் வசிப்பதுடன், கொத்தலாவல பாதுகாப்புக் கல்விக்கழகத்தினால் அல்லது அவ்வவ்படைச் சேவை நிறுவனத்தால் விதிக்கப்படும் நடைமுறை ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

13. **மொழித் தேவைப்பாடுகள்.**- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கு ஏதுவாக ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படவுள்ள விதிகளுக்கு அமைந்து நடக்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

14. **அடையாள அத்தாட்சி.**- விண்ணப்பதாரர்கள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கு சான்று சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர். இந்நோக்கத்துக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் அல்லது அஞ்சல் அதிபதியினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளும், மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் மோட்டார் வாகனங்களைச் செலுத்துவதற்கென வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

15. **விண்ணப்பங்கள்.**-பயிலிளவல் நிலைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒன்றில் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்பலாம். அல்லது "சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், பதிவாளர்" இற்கு சுய விலாசமிடப்பட்ட 9" × 4" கடித உறையுடன் ரூபா 5 கொண்ட பெறுமதியான முத்திரையை அனுப்பி விண்ணப்பப்படிவத்தையும், மேலும் தகவல்களை வழங்கும் சிறு பிரசுரத்தினையும் பெற்றுக் கொள்ளலாம்.

16. முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் ரூபா 100 ஐ (நூறு ரூபா) செலுத்தி நாட்டில் உள்ள ஏதாவது இலங்கை வங்கியில், "இலங்கை வங்கி, மொறட்டுவை - இடம் கிளையின் 681950" என்ற கணக்கு இலக்கத்திற்கு வரவு வைக்கப்படக்கூடியதாக "கொமாண்டன்ற், கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" என்பதன் சார்பாக பெறப்பட்ட பற்றுச்சீட்டை இணைத்திருக்க வேண்டும். குறைந்தளவு அடிப்படைத் தகுதிகள் இல்லாத, முறைப்படி பூரணப்படுத்தப்படாத அல்லது வர்த்தமானி அறிவித்தலில் விதிக்கப்பட்ட நிலைமைகளை அடையாத விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிக்கு எதுவித தகவலுமின்றி நிராகரிக்கப்படும். எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்பத்துடன் சேர்த்து ரூபா 5 (ஐந்து ரூபா) பெறுமதியான முத்திரையுடன் சுய விலாசமிடப்பட்ட உறையொன்றை அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

17. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் இரு பிரதிகள், "பதிவாளர், சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்லைக்கழகம், கண்டாவளை தோட்டம், இரத்மலானை" என்ற முகவரியை 2009, சித்திரை 3 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்தெய்துமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பயிலிளவல் நிலைக்கான

விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கு கிடைக்கும், அல்லது இந்த அறிவித்தலிலுள்ள தேவைகளுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

18. அரசாங்க சேவையினையும், கூட்டுத்தாபனங்களையும் அல்லது நியதியாக்கச் சபைகளையும் சேர்ந்த உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களம்/கூட்டுத்தாபனம்/நியதியாக்கச் சபை ஆகியவற்றின் தலைவர்கள் ஊடாக அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதை உறுதிப்படுத்தும் ஒரு சான்றிதழையும் அது கொண்டிருத்தல் வேண்டும்.

19. விண்ணப்பங்களுடன் பிறப்புச் சான்றிதழ், கல்வித் தமைகளுக்கான சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

20. கொத்தலாவல பாதுகாப்புக் கல்விக்கழகத்தின் முகாமைச் சபை நியமித்த தெரிவுக்குழுவினால் தீர்மானிக்கப்படும் மதிப்பீட்டுத் தகவுதிறனுக்கு அமைவாக தேவைப்படும் தகைமையுடைய பரீட்சார்த்திகளிலிருந்து தொடக்க நிலை தெரிவு நடாத்தப்படும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் முகாமைச் சபை விதித்துரைக்கக்கூடிய பரீட்சைக்கு உட்படுமாறு தேவைப்படுத்தப்படுவர். இறுதித் தெரிவானது சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் முகாமைச் சபை நியமித்த இறுதித் தெரிவுக் குழுவினால் செய்யப்படும்.

21. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் வேட்பாளருக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்குரிய இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது தொடர்பாக வேட்பாளர்களுக்கு பிரயாணச் செலவு அல்லது வேறு செலவுகள் செலுத்தப்படமாட்டா.

22. வேட்பாளர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரேனும் ஒருவர் அவருக்குக் குணச் சான்றிழை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். எந்த விதத்திலாவது ஆதரவு திரட்டுவது, அத்தகைய வேட்பாளரைத் தகைமை நீக்கம் செய்வதாக அமையும்.

23. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படமாட்டாது. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக கடிதத் தொடர்புகள் அல்லது விசாரணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

கோடாபய ராஜபக்ஷ ஆர்டபிள்யுபி, ஆர்எஸ்பி, பிஎஸ்சீ,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய
அமைச்சின் செயலாளரும்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக
முகாமைச் சபைத் தலைவரும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்துக்கு)

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

*பட்டப்படிப்புப் பயிலிளவல் நிலைக்கான விண்ணப்பம்*

அடையாள இல.

1. பெயர் (பெரிய எழுத்துக்களில்):-
   (அ) முழுப் பெயர்:-----.
   (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./செல்வி :-----.

2. (அ) அஞ்சல் முகவரி :-----.
   (ஆ) தொலைபேசி இல. :-----.

3. பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4. வயது: 3.4.2009 இல் உள்ளவாறு :-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. சிவில் அந்தஸ்து: விவாகமானவர்/தனியாள்

6. பால் (ஆண்/பெண்) : -----.

7. இலங்கைக் குடியுரிமை பரம்பரை மூலமா/பதிவு மூலமா? : -----.

8. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை
க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சைக்குப் படித்த பாடசாலை : -----.

சுட்டிலக்கம் : -----.
ஆண்டு : -----.

(ஆ) க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை
க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்குப் படித்த பாடசாலை : -----.

சுட்டிலக்கம் : : -----.
ஆண்டு : -----.
கூட்டுமொத்தப் புள்ளி : -----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. ........................................ | ................ | 1. ........................................ | ................ |
| 2. ........................................ | ................ | 2. ........................................ | ................ |
| 3. ........................................ | ................ | 3. ........................................ | ................ |
| 4. ........................................ | ................ | 4. பொது சோதனைப் புள்ளிகள் | ................ |
| 5. ........................................ | ................ | | |
| 6. ........................................ | ................ | | |
| 7. ........................................ | ................ | | |
| 8. ........................................ | ................ | | |

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்துக்கு 'D/A' 'C/B' அல்லது 'S' சித்தி எடுத்தீரா என்பதைக் குறிப்பிடுக.

**துறை**

| பௌதீகம் | உயிரியல் | வர்த்தகம் | கலை |
|---|---|---|---|
| | | | |

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்ககழக அனுமதிக்குத் தகுதியானவரென நீர் அறிவிக்கப்பட்டுள்ளீரா? (இத்துடன் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்).

9. எவ்விளையாட்டுக்களில் நீர் பங்குபற்றியுள்ளீர்? :-

| | *SL | *DL | *CL | *NTL |
|---|---|---|---|---|
| (அ) மெய்வல்லுநர் | | | | |
| (ஆ) பட்மின்ரன் | | | | |
| (இ) கூடைப்பந்து | | | | |
| (ஈ) கிரிக்கெட் | | | | |
| (உ) ஹொக்கி | | | | |
| (ஊ) றகர் | | | | |
| (எ) உதைப்பந்தாட்டம் | | | | |
| (ஏ) நீச்சல் | | | | |
| (ஐ) டேபிள் ரெனிஸ் | | | | |
| (ஒ) ரெனிஸ் | | | | |
| (ஓ) கரப்பந்தாட்டம் | | | | |
| (ஔ) மற்போர் | | | | |
| (ஃ) கராத்தே | | | | |
| (க) ஜுடோ | | | | |
| (கா) குத்துச் சண்டை | | | | |
| (கி) ஸ்குவாஷ் | | | | |

*SL பாடசாலை மட்டம்
*DL மாவட்ட மட்டம்
*CL கழக மட்டம்
*NTL தேசிய மட்டம்

10. புறக்கிருத்திய முயற்சிகள் :

| | |
|---|---|
| (அ) பாண்டு | |
| (ஆ) கடெற்றிங் | |
| (இ) சாரணர் நிகழ்ச்சி | |
| (ஈ) சங்கங்கள் | |
| (உ) மாணவர் தலைவர் | |
| (ஊ) இல்லத் தலைவர் | |
| (எ) பாடசாலைத் தலைவர் | |
| (ஏ) | |
| (ஐ) | |

11. உடற் தேவைப்பாடுகள்:

| உயரம் | | எடை | மார்பு |
|---|---|---|---|
| அடி | அங். | இறாத்தல் | அங்குலம் |
| | | | |

12. ஏதாவது வேறு இசைபுடைய விடயங்கள்:-----.
(தேவையேற்படின் தனித்தனியான தாள்களை இணைக்கவும்).

13. குணச்சான்றிதழ் பெற்றவர்களின் விபரங்கள் :

| | பெயர் | முகவரி | தொழில் | தொலைபேசி இல. |
|---|---|---|---|---|
| (i) | | | | |
| | ..................... | .................................. | ................................ | ............................ |
| | ..................... | .................................. | ................................ | ............................ |
| | ..................... | .................................. | ................................ | ............................ |
| (ii) | ..................... | .................................. | ................................ | ............................ |
| | ..................... | .................................. | ................................ | ............................ |
| | ..................... | .................................. | ................................ | ............................ |

14. தயவு செய்து நாட்டில் உள்ள ஏதாவது இலங்கை வங்கிக் கிளைக்கு ரூபா 100 (நூறு ரூபா செலுத்தி "இலங்கை வங்கி - மொறட்டுவை இடம கிளையின் 681950" என்ற கணக்கு இலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டிருப்பதுடன், பின்வரும் விபரங்களை வழங்கவும் (இதனகத்து பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)

(i) கொடுப்பனவுத் திகதி ;
(ii) கொடுப்பனவின் இலங்கை வங்கிக் கிளை.

15. என்னால் மேலே வழங்கப்பட்டுள்ள தகவல் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என நான் வெளிப்படுத்துகிறேன். இந்த விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல் எவையேனும் சரியற்றவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் நான் தகைமை இழப்புக்கு உள்ளாவேன் என்பதையும், தெரிவிக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு எதுவுமின்றி நீக்கப்படுவதற்கு நான் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

3-122

## தொழில்சார், தொழில்நுட்ப பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) பதவிகள்

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் விசேட ஆளணியின்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| தொடர் இல. | பதவி | சிங்கள மொழிமூல வெற்றிடங்கள் | தமிழ் மொழிமூல வெற்றிடங்கள் | ஆங்கில மொழிமூல வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | போதனாசிரியர்-இலத்திரனியல் | 26 | 07 | - |
| 2 | போதனாசிரியர்-கட்டிடத் தொழில்துறை | 36 | 09 | - |
| 3 | போதனாசிரியர்-மோட்டர் இயந்திரவியல் | 18 | 09 | - |
| 4 | போதனாசிரியர்-மரவேலை | 46 | 09 | - |
| 5 | போதனாசிரியர்-குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் | 17 | 02 | - |
| 6 | போதனாசிரியர்-தொழில்நுட்ப வரைதல் | 24 | 08 | - |
| 7 | போதனாசிரியர்-மின்னியல் தொழிற்துறை | 08 | 09 | - |
| 8 | போதனாசிரியர்-ஆங்கில மொழித்துறை | - | - | 66 |
| 9 | போதனாசிரியர்-கணனி தொழில்நுட்பவியல் | 41 | 08 | - |
| 10 | போதனாசிரியர்-விஞ்ஞானம் மற்றும் கணிதம் | 01 | 01 | - |
| 11 | போதனாசிரியர்-வணிகக்கல்வி | 02 | 02 | - |
| 12 | போதனாசிரியர்-உலோக வேலை | 08 | 06 | - |

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2009.03.31 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, கொழும்பு 10" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச்சேவை (விசேட ஆளணி) III ஆம் வகுப்புப் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் உமது தேர்வு ஒழுங்கின்படி ஒவ்வொரு பதவிக்கும் பதவி தொடர் இலக்கத்தையும் பதவியின் பெயரையும் அவ்விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும். வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகுதிகள் இருக்கும் விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2. **சேவை நிபந்தனைகளும் நியமன நியதிகளும்.**- (அ) இப்பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் விதவைகள் மற்றும் அநாதைகள்/தபுதாரர் மற்றும் அனாதைகள் இளைப்பாற்று நிதியத்திற்கு உதவுத்தொகைகள் செலுத்துமாறு வேண்டப்படுவர். தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தி அரச சேவையில் முதலில் மூன்று வருடத்திற்கு தகுதிகாண்/ தேர்வாய்வுக்குரிய நிலையில் நியமிக்கப்படுவர்.

(ஆ) வினைத்திறன்காண் தடை.- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 20/2001 இன் பிரகாரம் பதவியொன்றுக்கு நியமனம் செய்யப்படும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் 1 ஆவது வினைத்திறமைகாண் தடையை 4 ஆவது சம்பள படி ஏற்றத்திற்கு முன்பதாகவும் 2 ஆவது வினைத்திறமை காண் தடையை 7 ஆவது சம்பளப் படி ஏற்றத்திற்கு முன்பதாகவும் பூர்த்திசெய்தல் வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்திசெய்யாதவர்களது வருடாந்த சம்பள உயர்வு தடுத்து வைக்கப்படுவதுடன் வழங்கப்பட்ட கால வரம்பிற்கு மேலதிகமாக எடுக்கப்பட்ட கால எல்லையெனக் கணிக்கப்படும். இவ்வுத்தியோகத்தர்கள் தகுதிகாண் தடையைப் பூர்த்திசெய்யும் வரை தொழில்நுட்பக் கல்விச் சேவையில் எந்த ஒரு உயர் பதவிக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவராவார்.

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவை (விசேட ஆளணி) III ஆம் வகுப்பில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள், நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடத்திற்குள் இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். இது பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இற்கு ஒருங்கமைவானது. உரிய காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினால் சம்பள ஏற்றம் பிற்போடுவதற்கேதுவாகலாம்.

மொழித்தேர்ச்சி பெறவேண்டிய உத்தியோகத்தர்கள், க. பொ. த. (சா. த.) இல் பிரதான பாடமாக கொண்ட சிங்களம்/தமிழ் மொழியை இரண்டாவது மொழித் தேர்ச்சிக்காக சித்திபெறல் வேண்டும். (விருப்புத் தேர்வுக்குரிய பாடம் அல்லது 2 ஆவது மொழி, இத்தேர்வில் உள் அடங்காது.) அத்துடன் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சை அல்லது விசேட திறன் பரீட்சை ஒன்றில் சித்திபெறல் வேண்டும்.

3. **வேதனங்களும் கொடுப்பனவுகளும்.**- மேற்படி பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூபா 53,555. பொது நிர்வாகச் சுற்றறிக்கை SL-1-2006 இன்படி சம்பளம் வழங்கப்படும். சம்பள ஏற்றக் கொடுப்பனவு மேலே 2 உள்ள (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைவதற்கு உட்பட்டதாகும்.

**4. தேவையான தகைமைகள்.**- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழ்க்காணும் தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை நிரூபிக்கும் சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) மெச்சத்தகு பண்புகளும் தேகாரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.
(இ) விண்ணப்பம் முடிவடையும் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.
(ஈ) ஒவ்வொரு பதவிக்கும் கீழே தரப்பட்டுள்ளவாறு தொழில் வல்லுனர் தகைமை/கல்வித் தகைமைகளுடன் குறித்த பதவிக்கு தேவையான அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**5. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

5.1 இலத்திரனியல் போதனாசிரியர் :

(அ) (i) தொழில்நுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (இலத்திரனியலும் தொலைத்தொடர்பாடலும்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல், எந்திரவியல்-இலத்திரனியல்)

அல்லது

(iii) தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (மின்னியல் மற்றும் இலத்திரனியல்)

அல்லது

(iv) இலண்டனில் உள்ள சிட்டி அன்ட் கீல்ஸ் நிறுவனத்தின் பூரண தொழில்நுட்ப சான்றிதழ் (அதற்குரிய துறையில்)

அத்துடன்

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்

அல்லது

(v) சமமான அல்லது உயர் தகைமைகள், அத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர் மட்ட தகைமைகள் (தகைமைகள் பொது நிர்வாக அமைச்சினாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

அத்துடன்

(ஆ) குறித்த (அ) தகைமைகளுள் ஒன்றைப் பெற்ற பின் அதற்குரிய துறையில் 5 வருட கற்பித்தல் அனுபவம் அல்லது செயல்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

5.2 கட்டிடத் தொழிற்றுறைப் போதனாசிரியர் :

(அ) (i) தொழில்நுட்பவியலிலான தேசிய டிப்ளோமா (குடிசார் எந்திரவியல்)

அல்லது

(ii) எந்திரவியலிலான உயர் தேசிய டிப்ளோமா (குடிசார் எந்திரவியல்)

அல்லது

